செ.வெ.எண்-20 நாள்-06.02.2020

# அரியலூர் மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப்பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 2019-20 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிப் பெற்ற 650 வீரர், வீராங்கனைகளுக்கு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் 2019-2020 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான அரியலூர் மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகள் 12.02.2020 அன்று கையுந்துபந்து, டென்னிஸ், இறகுபந்து, கபாடி, கூடைப்பந்து, வளைகோல்பந்து ஆகிய விளையாட்டுகளிலும், 13.2.2020 அன்று தடகளம், நீச்சல், குத்துசண்டை, ஜீடோ ஆகிய விளையாட்டுகளிலும் நடைபெற்றது. போட்டிகளில் 1600 வீரர், வீராங்கனைகள் ஆன்லைன் பதிவின் மூலம் பங்கேற்றனர்.

குழுவிளையாட்டுப்போட்டிகளில் ஹாக்கி ஆண்கள் பிரிவில் பசுபதி மெமோரியல் ஹாக்கி கழகம் அணியும், ஹாக்கி பெண்கள் பிரிவில் பரணம் அரசு உயர்நிலைப்பள்ளி அணியும், கபாடி ஆண்கள் பிரிவில் ஜெயங்கொண்ட் ஈ.என்.ஸ்போர்ட்ஸ் அணியும், கபாடி பெண்கள் பிரிவில் இடையக்குறிச்சி அரசுமேல்நிலைப்பள்ளி அணியும், கையுந்துபந்து ஆண்கள் பிரிவில் இடையக்குறிச்சி Friends கையுந்துபந்து கழகம் அணியும், கையுந்துபந்து பெண்கள் பிரிவில் செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி அணியும், சிறகுபந்து பெண்கள் பிரிவில் அரியலூர் அண்ணா பல்கலைக்கழகம் அணியும், கூடைப்பந்து ஆண்கள் பிரிவில் ஜெயங்கொண்டம் பரபிரம்மா பவுண்டேசன் கூடைப்பந்து கிளப் அணியும், கூடைப்பந்து பெண்கள் பிரிவில் ஜெயங்கொண்டம் பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளி அணியும், டென்னிஸ் ஆண்கள் பிரிவில் அரியலூர் அரசு கலைக்கல்லூரி அணியும், டென்னிஸ் பெண்கள் பிரிவில் தாமரைக்குளம் வித்யாமந்திர் அணியும் ஆகிய அணிகள் முதல் இடத்தினைப்பெற்றனர்.

மாவட்ட அளவிலான குழு மற்றும் தடகளப் போட்டிகளில் முதல் மூன்று இடத்தினைப் பெறும் ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளுக்கு தலா ரூ.1000/- ரூ.750/- ரூ.500/- வீதம் அவர்களது வங்கிக்கணக்கில் செலுத்தப்பட உள்ளது. குழுப் போட்டிகளில் தேர்வு செய்யப்பட்டவர்கள் மற்றும் தடகளப்போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் மாநில அளவில் நடைபெறும் மாண்புமிகு முதல்வர் கோப்பைக்கான விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொள்வார்கள்.

மேலும், மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் நமது மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அனைத்து போட்டிகளிலும் பங்குபெற்று மாவட்டத்திற்கு பெருமைசேர்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் ஜெயக்குமார்ராஜா, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் இராஜேந்திரன், கையுந்துபந்து பயிற்றுநர் ஆர்.பொற்கொடி மற்றும் விளையாட்டு ஆசிரியர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**